தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

தை 19, தாரண – திருவள்ளுவர் ஆண்டு 2036

2005 பிப்ரவரி 1, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதொன்று இல்."

ஒப்பற்றதாகவும், அழிவில்லாததாகவும் இந்த உலகத்தில் நிலைத்திருப்பது, புகழைத் தவிர, வேறு எதுவுமே இல்லை.

1. இரங்கற் குறிப்புகள்

முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் தற்காலிக தமிழக ஆளுநர் நீதியரசர் திரு. எம்.எம். இஸ்மாயில் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரங்கற் குறிப்புகள். தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்களான, திரு. ந. தீர்த்தகிரி அவர்கள், 2–7–2004 அன்றும், திருமதி பி.கே.ஆர். லக்ஷ்மிகாந்தம் அவர்கள், 20–11–2004 அன்றும், திரு. சி. வீரமணி அவர்கள், 19–12–2004 அன்றும், பேரவை முன்னாள் உறுப்பினர்களும், முன்னாள் அமைச்சர்களுமான திரு. த. இராமசாமி அவர்கள், 19–12–2004 அன்றும், திரு. ஆலடி அருணா அவர்கள், 31–12–2004 அன்றும், தமிழகத்தின் முன்னாள் தற்காலிக ஆளுநரும், சென்னை உயர் நீதிமன்ற முன்னாள் தலைமை நீதியரசருமான நீதியரசர் திரு. எம்.எம். இஸ்மாயில் அவர்கள், 17–1–2005 அன்றும் மறைவுற்ற செய்தியினைப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

[பேரவைத் தலைவர்] [2005 பிப்ரவரி 1

திரு. ந. தீர்த்தகிரி அவர்கள், அரூர் தனித் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1967 முதல் 1971 வரை சீரிய முறையில் பணியாற்றியுள்ளார்.

திருமதி பி.கே.ஆர். லக்ஷ்மிகாந்தம் அவர்கள், மதுரை கிழக்குத் தொகுதியிலிருந்து, தொடர்ந்து இருமுறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1957 முதல் 1962 வரை மற்றும் 1962 முதல் 1967 வரை சிறந்த முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. சி. வீரமணி அவர்கள், சங்கரி தனித் தொகுதிக்கு நடைபெற்ற இடைத் தேர்தலில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1968 முதல் 1971 வரை நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. த. இராமசாமி அவர்கள், 1977–1980, 1980–1984 மற்றும் 1985–1988 ஆகிய ஆண்டுகளில், இராமநாதபுரம் தொகுதியிலிருந்து தொடர்ந்து மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினராகவும், 1985–1987 ஆகிய ஆண்டுகளில், மறுவாழ்வு, வேலைவாய்ப்பு மற்றும் வணிக வரித் துறை ஆகிய துறைகளுக்குப் பொறுப்புடைய அமைச்சராகவும் பாராட்டத்தக்கவகையில் பணியாற்றியுள்ளார்.

திரு. ஆலடி அருணா அவர்கள், 1967–1971, 1971–1976 மற்றும் 1996–2001 ஆகிய ஆண்டுகளில் ஆலங்குளம் தொகுதியிலிருந்து மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினராகவும், 1977–1980 ஆகிய ஆண்டுகளில் மக்களவை உறுப்பினராகவும், 1983–1989 ஆகிய ஆண்டுகளில், மாநிலங்களவை உறுப்பினராகவும், 1996–2001 ஆகிய ஆண்டுகளில் சட்டத் துறை அமைச்சராகவும் திறம்படச் செயலாற்றியுள்ளார்.

சிறந்த தமிழறிஞர் எனப் பலராலும் பாராட்டப்பட்ட நீதியரசர் திரு. எம்.எம். இஸ்மாயில் அவர்கள், 1980 ஆம் ஆண்டில், தமிழகத்தின் தற்காலிக ஆளுநராக, மிகக் குறுகிய காலம் பொறுப்பு வகித்துள்ளார். 1969 ஆம் ஆண்டு முதல், சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதியரசராகவும், 1979 ஆம் ஆண்டு முதல் 1981 ஆம் ஆண்டு வரை, சென்னை உயர் நீதிமன்றத் தலைமை நீதியரசராகவும் பணியாற்றியுள்ளார். மேலும், கம்பன் கழகத்தைத் தோற்றுவித்து, அதன் தலைவராகவும் திகழ்ந்துள்ளார்.

அன்னார்களது மறைவால், அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினர்க்கு, ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெரியவர்களுக்கு மரியாதை செலுத்துமவகையில், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதிகாக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித் துளிகள் அமைதி காத்தனர்.)

2. இரங்கல் தீர்மானங்கள்

(அ) திரு. பி.வி. நரசிம்ம ராவ், முன்னாள் பாரதப் பிரதமர் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரங்கல் தீர்மானங்கள் கீழ்க்காணும் இரங்கல் தீர்மானங்களைப் பேரவைமுன் வைக்கிறேன்:

"சிறந்த தேசியவாதியும், இந்திய விடுதலைப் போராட்ட வீரரும், நமது பாரத நாட்டின் பிரதமராகப் பணியாற்றியவருமான திரு பி.வி. நரசிம்ம ராவ் அவர்கள், தமது 83 ஆவது அகவையில், 23-12-2004 அன்று மறைவுற்றது குறித்து, இப்பேரவை, பேரதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது."

மறைந்த முன்னாள் பாரதப் பிரதமர் திரு. பி.வி. நரசிம்ம ராவ் அவர்கள், பன்மொழி வித்தகர். எழுத்தாற்றல் மிக்கவர். சுதந்திர இந்தியாவின் புதிய பொருளாதாரச் சீர்திருத்தத்திற்கு வித்திட்டவர். அரசியல் அரங்கிலும், நிர்வாகத் துறையிலும் தனித் திறம்கொண்ட பேராற்றலாளர். அரசியலில் நவீன சாணக்கியர் என அனைவராலும் குறிப்பிடப்படும் அரசியல் வித்தகர். ஆந்திர மாநிலச் சட்டமன்றப் பேரவையில் உறுப்பினராக, அமைச்சராக, அம்மாநிலத்தின் முதலமைச்சராகப் பணியாற்றியவர். நாடாளுமன்றத்தின் மக்களவைக்குத் தொடர்ந்து ஐந்து முறை தேர்ந்தெடுக்கப்பட்டு, மத்திய அமைச்சராகப் பல்வேறு முக்கியத் துறைகளுக்குப் பொறுப்பு வகித்தவர். 1991 ஆம் ஆண்டு முதல் 1996 ஆம் ஆண்டு வரை, நமது நாட்டின் பிரதமராக அரும்பணியாற்றியவர், திரு. பி.வி. நரசிம்ம ராவ் அவர்கள்.